ஜூன் 13, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

இனிமையான குழந்தாய், தங்களுடைய ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விழித்தெழுந்த குழந்தைகள், அவர்கள் சிவ்பாபாவின் குழந்தைகள் என்பதை தெரிந்து அதிகமான சந்தோஷத்தை அனுபவம் செய்கின்றார்கள், அவர்களுக்கு எந்த விதமான கவலையும் இல்லை. தந்தை நம்மை அழுகை என்பதே இல்லாத உலகின் அதிபதிகள் ஆக்கிக்கொண்டிருக்கின்றார். இது அழுகின்ற உலகம். அது மனமகிழ்ச்சியான உலகம்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் அசாதாரண உண்மையான, நான் கடவுளின் குழந்தை, நான் கவலைகளிலிருந்து விடுப்பட்டு இருக்கின்றேன் என்ற விழிப்புணர்விற்கு விழித்துக்கொண்டிருப்பதை மீண்டும் உறுதி செய்துக்கொள்வேன். பாபா என்னை ஒரு தெய்வீக பிறவி ஆக்கிக்கொண்டிருக்கின்றார். மனமகிழ்ச்சி மற்றும் ஒளி நிறைந்த ஓர் உலகிற்கு என்னை அழைத்து செல்கின்றார்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: குழந்தைகளாகிய நீங்கள் பெரும் வலிமையை பெறுகின்றீர்கள், அதன் மூலம் எந்த ஒருவரும் உங்களை கைப்பற்ற முடியாது. நீங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றீர்கள். எனவே, இந்த படிப்பில் நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த படிப்பை படிப்பதன் மூலம், நீங்கள் உங்கள் வாயில் தங்க கரண்டியை பெறுவீர்கள்.

நான் தெய்வீக ஞானத்தை ஒரு நாளின் ஒவ்வொரு காட்சியிலும் கொண்டு செல்லும்போது கவனம் கொள்ளும் மனோபாவத்தை கொண்டிருப்பதில் உறுதியாக இருக்கிறேன். இந்த கவனத்தின் மையத்தில் சுயத்தின் மீது அன்பும் கருணையும் உள்ளது. நான் இந்த தங்க வாய்ப்பை எடுத்துகொண்டு வாழ்க்கையின் பல தங்க பரிசுகளை பெற போதுமான அக்கறை கொள்வேன்.

## திருஷ்டி அல்லது தூயப் பார்வை

பாபா ஆத்மாவிற்கு: நீங்கள் எவ்வாறு இருந்தீர்கள் எவ்வாறு மாறுகின்றீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். கடவுளின் மகாவாக்கியங்கள் "நான் உங்களுக்கு இராஜ யோகம் கற்பித்து அரசர்களுக்கெல்லாம் ஓர் அரசர் ஆக்குகின்றேன்".

இன்று என்னுடைய திருஷ்டியில், நான் ஓர் மேன்மையான பார்வையுடன் என்னை நான் பார்ப்பதில் கவனம் செலுத்துகின்றேன். நான் என்னை சாதாரணமாக பார்ப்பதை விட்டுவிடுகின்றேன். ஓர் இராஜரீகமான ஆன்மீகம், தெய்வீக பொக்கிஷங்களையும் அசாதாரண ஒளிக் கதிர்களையும் வெளிப்படுத்தும் மனதிற்கு

ஓர் அரசராக என்னை நான் பார்க்கின்றேன். நான் சந்திக்கும் அனைவரையும் கூட அதே பொக்கிஷங்கள் மற்றும் ஒளியை பெற சாத்தியம் உள்ளவர்களாக பார்க்கின்றேன்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*